**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.70/2024</u>**

2025-ம் வருடம் ஜுன் திங்கள் 19-ம் நாளன்று வாதி சாட்சியாக வா.சா.4-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சண்முகம் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை:-</u>

நான் ஈசநத்தத்தில் குடியிருக்கிறேன். மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு பாலசுப்பிரமணியம் நன்கு தெரியும். பாலசுப்பிரமணியம் உயிலை எழுதினார். 21.01.2015 ஆம் தேதி உயிலை எழுதினார். வா.சா.ஆ.6 தான் பாலசுப்பிரமணியம் எழுதிய உயில் ஆகும். பாலசுப்பிரமணியம் இரண்டு தாள்களில் கையொப்பம் செய்துள்ளார். அது ஏற்கனவே வா.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் உயிலில் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். நான் இரண்டு கையொப்பங்கள் செய்துள்ளேன். அடையாள அட்டையிலும் கையொப்பம் செய்துள்ளேன். அந்த அடையாள அட்டை இதுதான். **<u>அது வா.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** உயிலில் உள்ள இரண்டாவது கையொப்பம் இதுதான். **<u>அது வா.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** உயிலில் உள்ள விபரங்கள் தெரியும். உயில் கரூரில் வைத்து தயார் செய்யப்பட்டது. பாலசுப்பிரமணியம் சொல்ல ஒரு வழக்கறிஞர் தயார் செய்தார். பாலசுப்பிரமணியம் உயிலிற்குரிய

வாசகத்தை சொல்லும்போது அவர் மனநிலை தெளிவாக இருந்தது. அவர் உயிலை பாலசுப்பிரமணியனின் மகனின் எதிர்காலத்திற்காக எழுதி வைப்பதாக கூறினார். உயிலில் நான்கு சொத்துக்கள் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவரது வீடு பூர்வீக சொத்தில் அவருக்கு வரவேண்டிய பங்கு மேலும் பெரியம்மாவிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்தையும் உயில் எழுதி வைத்தார். இவை அனைத்தும் அவரது மகன் நாட்ராயனுக்கு எழுதி வைத்துள்ளார்.

## 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை

நான் ஈசநத்தத்தில் தான் பிறந்து அங்கு வாழ்ந்து வருகிறேன். பாலசுப்பிரமணியம் இறந்து 2, 3 ஆண்டுகள் இருக்கும். பாலசுப்பிரமணியன் ஈசநத்தத்தில்தான் குடியிருந்தார். அவர் குடும்பத்தாரும் அங்குதான் குடியிருந்தார்கள். பாலசுப்பிரமணிக்கு கிரையம் பெற்ற சொத்தும் மற்றும் பாகப்பிரிவினை மூலம் பிரிந்த சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியம் நன்றாகதான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னால் தவறு, உயிலில் உடம்பு சரியில்லாமல் இருப்பதாக கூறியிருந்தால் அது தவறு. பாலசுப்பிரமணியம்தான் உயில் எழுதி வைப்பதாக என்னை அழைத்தார். நான், சிவக்குமார், பாலசுப்பிரமணியம் ஆகியோர் உயில் எழுதுவதற்காக பேரூந்தில் சென்றோம். கரூர் டவுனில் உள்ள ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் உயில் எழுதப்பட்டது. வழக்கறிஞர் அலுவலகம் குறிப்பாக எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. ஈசநத்ததில் உள்ள எனது கடைக்கு அதிகபட்சம், அதிக பொருட்களை கரூர் நகரில் இருந்துதான் வாங்குவேன். கரூர் டவுனில் எனக்கு குறிப்பாக மளிகை சார்ந்த பகுதிதான் தெரியும், மற்ற பகுதிகள் தெரியாது. பாலசுப்பிரமணியம் நீலகலர் மையில் கையொப்பம்

செய்தார். நீலகலர் மையில் இரண்டு கையொப்பங்கள் செய்தார். உயிலில் அடித்தல், திருத்தல் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உயிலில் உள்ள சொத்து குறித்து எந்த ஆவணத்தை வைத்து சொல்லப்பட்டது என்றால் பாலசுப்பிரமணிக்குதான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் உயில் தயாரித்தார் என்று தெரியும். உயிலை டைப் செய்யும்போது நான் உடனிருந்தேன். வழக்கறிஞர் அலுவலகத்தில் உள்ளவர்தான் உயிலை டைப் அடித்தார்கள், யார் டைப் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. சிவக்குமார், பாலசுப்பிரமணியம், நான் உயில் எழுதும்போது இருந்தோம். எத்தனை மணிக்கு உயில் தயார் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை, ஊரில் இருந்து கரூருக்கு காலையில் வந்தோம், எத்தனை மணிக்கு உயில் எழுதப்பட்டது என்று ஞாபகம் இல்லை. ஈசநத்தத்தில் இருந்து அரவக்குறிச்சிக்குதான் பத்திரம் எழுத செல்வார்கள் என்றால் சரிதான். உயில் என்ன கிழமையில் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அது வேலை நாளா, விடுமுறை நாளா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள், நாட்ராயன், சிவக்குமார் (வா.சா.3) மூவரும் சேர்ந்து போலியாக வா.சா.ஆ.6 ஆவணத்தினை தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் தவறு. எந்த காலத்திலும் பாலசுப்பிரமணியம் உயில் எழுதவில்லை என்றும், வா.சா.ஆ.6 ல் உள்ளது அவரது கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல, வா.சா.ஆ.6 ல் உள்ளது அவரது கையொப்பம்தான். பாலசுப்பிரமணியம் மகள் பாக வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வா.சா.ஆ.6 உங்களுடன் கூட்டு சதியால் நாட்ராயனால் உற்பத்தி செய்யப்பட்ட போலியான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நாட்ராயனுக்கு லாபம் வேண்டும் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.